# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்
## மாதிரிப் பரீட்சை - VIII
### வரலாறு I

| தரம் - 11 | சுட்டெண்:- | நேரம்:- 1 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு (1), (2), (3), (4) என்ற விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) மகானாம என்ற தேரரினால் எழுதப்பட்ட இலங்கையின் அரசியல், சமய தகவல்கள் உள்ளடங்கிய வரலாற்று ஏடு பின்வருவனவற்றுள் எது?
1) தீபவம்சம் 2) தாதுவம்சம் 3) போதிவம்சம் 4) மகாவம்சம்

02) ஜீ. எம் திரவிலியன் என்பவரால் வரலாறு தொடர்பாக கூறப்பட்ட கருத்து பின்வருவனவற்றில் எது?
1) இறந்தகாலத்தினூடாக நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வது
2) வரலாறு ஒரு தனிப்பாடமன்று எல்லாப் பாடங்களும் அடங்கும் ஒரு கட்டமாகும்
3) நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவு கோலாக இறந்த காலத்தை புரிந்து கொள்ள வேண்டும்
4) மனித குலத்தின் கடந்த காலத்தை கற்பது வரலாறாகும்

03) சித்துல்பவ்வ, சங்கபால விகாரை சாசனங்களில் பிரதானமாகக் குறிப்பிடப்படும் விடயங்கள்
1) துட்டகாமினி அரசனின் பத்து மகாபலசாலிகள் பற்றி
2) இரண்டாம் கஜபாகு, முதலாம் பராக்கிரமபாகு ஆகியோருக்கிடையிலான உடன்படிக்கை பற்றி
3) பொற்கொல்லர் தொடர்பான விபரங்கள்
4) ஆராமை நிர்வாகம் பற்றி

04) வடமேற்கு எல்லையினூடாக இந்திய பிரதேசத்திற்கு இடம்பெற்ற படையெடுப்புகள் பெரும்பாலும் இடம்பெற்ற கணவாய்
1) கைபர் 2) போலன் 3) கோமல் 4) மக்ரான்

05) குஷணப் பேரரசுக் காலத்திற்குரிய நிகழ்ச்சி பின்வருவனவற்றுள் யாது?
1) அலகாபாத் தூண் பொறிப்பை செய்வித்தமை 2) கங்கைச் சமவெளியைக் கீழ்ப்படுத்தியமை
3) நான்காம் பௌத்த சங்கத்தை நடாத்தியமை 4) மூன்றாம் பௌத்த சங்கத்தை நடாத்தியமை

06) பண்டைய இந்தியாவின் சாதிக்கட்டமைப்பில் கடினமான தொழில்கள் கையளிக்கப்பட்டவர்கள்
1) பிராமணர் 2) சத்திரியர் 3) வைசியர் 4) சூத்திரர்

07) பலாங்கொடை மனிதன் வாழ்ந்ததாகக் காணப்படும் குகை காணப்படும் மாவட்டம்
1) இரத்தினபுரி 2) அம்பாந்தோட்டை 3) அனுராதபுர 4) பொலன்நறுவை

08) உருவெல துறைமுகம் அமைந்துள்ள ஆற்று முகம்
1) யான்ஓயா 2) ஜஜ்ர நதி 3) மாதுறு ஓயா 4) கோணநதி

09) அனுராதபுரத்தைச் சகல அம்சங்களும் பொருந்திய தலைநகராக மாற்றிய அரசன்
1) துட்டகைமுனு 2) பண்டுகாபயன் 3) தேவநம்பியதீசன் 4) விஜயன்

10) பார்வதி சிலையின் கலைத்துவத்திற்குரிய பாரம்பரியம்
1) மௌரிய 2) குப்த 3) பல்லவ 4) சோழ

11) 4ம் மகிந்தனுடைய ஆட்சிக் காலத்தில் இலங்கையை ஆக்கிரமித்தவர்கள்
1) இராஷ்டிரகூட மன்னன், பராந்தக சோழன் 2) 1ம் இராஜேந்திரன், 3ம் கிருஷ்ணன்
3) கலிங்கமாகன், 1ம் இராஜேந்திரன் 4) பராந்தக சோழன், ஸ்ரீமாற ஸ்ரீ வல்லவன்

12) நுண்சாய்வுடன் அமைக்கப்பட்ட கால்வாய்க்கு சிறந்த உதாரணம்
1) அங்கமடில்ல கால்வாய் 2) யோத எலக் கால்வாய்
3) பப்பதன்ன கால்வாய் 4) எலகரக் கால்வாய்

13) அனுராதபுர காலத்தில் தக்கிணசேத நிர்வாகத்திற்கு பொறுப்பாகக் காணப்பட்டவர்
1) ஏபா 2) மாபா 3) படஹரிக 4) கமிக

14) பிக்குகளின் ஒழுக்க விதிகள் பற்றிய தம்பதெனிய கதிகாவத்தையை தொகுப்பதில் முக்கிய பங்காற்றியவர்
1) 3ம் விஜயபாகு 2) 4ம் விஜயபாகு 3) 2ம் பராக்கிரமபாகு 4) 1ம் புவனேகபாகு

15) இலங்கையின் சிற்பக்கலை, கட்டிடக்கலை என்பவற்றில் இந்துச் செல்வாக்கு முனைப்பாகக் காணப்பட்ட காலம்
1) அனுராதபுர - தம்பதெனியா 2) பொலன்னறுவ - கம்பளை
3) யாப்பஹுவ - குருநாகல் 4) கண்டி கோட்டை

16) 6ம் புவனேகுபாவின் சிறந்த பணியாகக் கருதக்கூடியது
1) இலங்கையில் உள்ள கிராமங்களின் எல்லைகளை வரையறை செய்தமை
2) பர்மா மீதான படையெடுப்பு மேற்கொண்டமை
3) 'சிங்கள சங்கய' என்ற கிளர்ச்சியை அடக்கியமை
4) மலையரட்டையில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கியமை

17) போரோபுதூர் விகாரை அமைந்துள்ள தீவு
1) சுமத்திரா 2) சம்பா 3) போர்ணியோ 4) ஜாவா

18) இந்தியாவிலே "ஜெஸிபா" வரி நீக்கப்பட்ட கால மன்னன்
1) ஔரங்சீப் 2) அக்பர் 3) ஜஷாங்கீர் 4) ஷாஜகான்

19) நாடுகாண் பயணங்களில் முதலில் கவனம் செலுத்திய நாடு
1) ஒல்லாந்து 2) ஸ்பானியா 3) பிரான்ஸ் 4) போத்துக்கல்

20) மேலைத் தேசத்தவர்களின் செல்வாக்கு காரணமாக இலங்கையர்களுக்கு ஏற்பட்ட நன்மைகளில் ஒன்று
1) புரொட்டஸ்தாந்து மதம் பரப்பப்பட்டது
2) ஆயர்வேத மருத்துவம் அறிமுகம் செய்யப்பட்டது
3) இராசகாரிய முறை நீக்கப்பட்டது
4) சர்வஜன வாக்குரிமை முறை அறிமுகம் செய்யப்பட்டது

21) மத்திய ஐரோப்பாவின் விவசாய விருத்திக்காக ஒவ்வொரு போகத்தின் போதும் வெவ்வேறு பயிர்களை பயிரிடும் முறை அழைக்கப்பட்ட பெயர்
1) பயிர்மாற்றுமுறை 2) நிலமாற்றுமுறை 3) காணியடைப்பு 4) பண்ணை முறை

22) கைத்தொழில் புரட்சி காரணமாக ஏற்பட்ட சமூக விளைவு
1) நகரங்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்தமை
2) இறக்குமதி ஏற்றுமதி கோலம் உருவாகியமை
3) கூட்டு வியாபார கம்பனிகள் உருவாகியமை
4) நிதிச்சேவை வங்கிச்சேவை பாரிய வளர்ச்சி பெற்றமை

23) நாடுகாண் பயணத்தை மேற்கொண்டு ஆபிரிக்காவின் தென்முனைவரை சென்று அதற்குப் புயல்முனை என பெயரிட்டு திரும்பிய கப்பலோட்டி

1) வாஸ்கொடகாமா
2) மகலன்
3) கொலம்பஸ்
4) பார்த்தலோமியஸ் டயஸ்

24) போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தில் தலையிடக் கிடைத்த முதற் சந்தர்ப்பம்

1) விஜயபாகு கொள்ளை
2) மல்வான ஒப்பந்தம்
3) தர்மபாலன் கிறிஸ்தவ சமயத்தை தழுவியமை
4) முல்லேரியா போர்

25) 1797 ல் நடந்த ஆங்கில வர்த்தக நிறுவனத்திற்கு எதிராக நடந்த கிளர்ச்சி தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழு

1) கோல்புறூக் ஆணைக்குழு
2) மியூரன் குழு
3) டொனமூர் ஆணைக்குழு
4) லோறன்ஸ் த அல்மேடா குழு

கீழே A, B, C, D, E என்பவற்றை பரிசீலித்து 26, 27, 28, 29, 30 ம் வினாக்களுக்கு விடையளிக்க.

A - காரள்மாக்ஸ்

B - அடம்ஸ்மித்

C - ஜேம்ஸ்வாட்

D - ஜோன்கே

E - டெம்ளர்

26) நீராவி இயந்திரத்தை கண்டுபிடித்தவர்

1) A 2) B 3) C 4) E

27) சமவுடமைக் கோட்பாட்டை தோற்றுவித்தவர்

1) A 2) B 3) C 4) D

28) நெசவுத் தொழிலில் பயன்படும் நுணாழியை கண்டுபிடித்தவர்

1) A 2) B 3) D 4) E

29) மோட்டார் வண்டியை நிர்மானித்த ஜேர்மனியர்

1) A 2) C 3) D 4) ந

30) பொருளியல் செயற்பாடுகளில் தடையின்றி சுதந்திரமாக ஈடுபடுவதற்கு மக்களுக்கு இடமளிப்பதன் மூலம் உச்ச முன்னேற்றத்தை அடையலாம் என்ற முன்வைத்த பொருளியலாளர்

1) A 2) B 3) C 4) D

31) இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் மிக ஒழுங்கமைத்த மிசனரிக் கல்வி முறையை உருவாக்கிய மிசனரி

1) லண்டன்மிசனரி
2) வெஸ்லியன், மெதடிஸ்தமிசன் மிசனரி
3) அமெரிக்கன் மிசனரி
4) பப்ரிஸ்ற் மிசனரி

32) கோல்புறூக் கமரன் சீர்திருத்தத்தின் மூலம் இலங்கையில் உருவாகிய சூழ்நிலைகளில் பிரதானமானது

1) தேசிய ஒற்றுமை ஏற்படுவதற்கு வழிவகுத்தது
2) இலங்கையில் ஒரு மத்தியதர வகுப்பு எழுற்சி பெறுவதற்கு வழிவகுத்தது
3) இராஜகாரிய முறையை ஒழிக்க வழிவகுத்தது
4) பௌத்த மறுமலர்ச்சி ஏற்பட்டது

33) விவசாயிகளின் ஆதரவுடன் மாவோ தேசிய படைகளை தோற்கடித்து சீனாவின் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றியவர்

1) சன்யத்சென் 2) சியான் கை சைக் 3) சௌ என்லாய் 4) மாவோ - சேதுங்

34) கெஸ்டெபோ எனும் புலனாய்வு பொலிஸ் பிரிவை உருவாக்கியவர்

1) பெனிரோ முசோலினி 2) ஜோசப் ஸ்ராலின்
3) அடொல்ப் ஹிட்லர் 4) வின்சன்ட் சேர்ச்சில்

35) இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரின் தோல்விக்கு வழிசமைத்த படையெடுப்பு

1) பெல்ஜியம் மீதான படையெடுப்பு 2) இங்கிலாந்து மீதான படையெடுப்பு
3) போலந்து மீதான படையெடுப்பு 4) ரஸ்யா மீதான படையெடுப்பு

36) இரண்டாம் உலக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மேற்கு ஜேர்மனி மற்றும் ஜப்பான் நாடுகளை மீளக்கட்டி எழுப்ப அமெரிக்க செயலாளர் நாயகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு

1) சர்வதேசச் சங்கம் 2) ஐக்கியநாடுகள் சபை
3) மொசாட் அமைப்பு 4) மார்ஷல் திட்டம்

37) ரஷ்ய நாட்டின் உளவுச் சேவைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு

1) CIA 2) MOSSAD 3) KGB 4) ROW

38) நெதர்லாந்தின் ஹக் நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனம்

1) செயலகம் 2) சர்வதேச நீதிமன்றம்
3) பாதுகாப்புச் சபை 4) பொதுச்சபை

39) N. M பெரேரா அவர்களால் தலைமை வகிக்கப்பட்ட அரசியல் கட்சி

1) தொழிற்கட்சி 2) இலங்கை சமசமாஜக் கட்சி
3) இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 4) தமிழரசுக் கட்சி

40) சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட புரட்சி

1) அமெரிக்க சுதந்திரப் போர் 2) ரஷ்யப் புரட்சி
3) பிரென்சுப் புரட்சி 4) ஆங்கிலப் புரட்சி

(40 x 2 = 80 புள்ளிகள்)

# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்
## மாதிரிப் பரீட்சை - VIII
### வரலாறு II

| தரம் - 11 | சுட்டெண்:- | நேரம்:- 3 மணித்தியாலம் |
|---|---|---|

- பகுதி I இல் 1ம் வினா கட்டாயமானது.
- பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி III இல் இருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

## பகுதி - I

01) (அ) பகுதி (i) இல் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வ்ழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் பகுதி (ii) இன் கீழ் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) மகாநாகுல, மினிப்பே அணைக்கட்டு, திருக்கேதீஸ்வரம், கம்பளை, முல்லேரியா, அனுராதபுரம், திஸாவாவி, யாழ்ப்பாணம், நைனாதீவு, மாணிக்க கங்கை

(10 புள்ளிகள்)

(ii) பேர்ள் துறைமுகம், கலிங்கம், ஹஸ்னி, டோக்கியோ, தாய்வான், கங்கைநதி, மலாக்கா தொடுகடல், போரோபுதூர் (08 புள்ளிகள்)

(ஆ)

(i) மேலே தரப்பட்ட A, B, C, D ஆகியவற்றில் சொல்லப்பட்ட வராலாற்று விபரங்களோடு தொடர்புடையவர்களை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A - ராஜபுத்திரப் பெண்களை அந்தப்புரத்திற்குக் கொண்டு வருவதை நிறுத்திய மொகாலய மன்னன்

B - அனுராதபுர யுகத்தின் இறுதியில் சிதைவடைந்த நீர்ப்பாசன அமைப்புக்களை புனரமைப்பு செய்த மன்னன்

C - யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளனாக சப்புல்மல்குமாரனை நியமித்த கோட்டை அரசன்

D - சீனாவில் வெற்றிகரமான புரட்சியை விவசாயிகள் செய்கின்றனர் எனக் கூறியவர்

(04 புள்ளிகள்)

(ii) இங்கு A, B ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களைப் பரிசீலித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடையை எழுதுக.




1. இக்கலைப்படைப்பு யாது?
2. இக்கலைப்படைப்பினை உருவாக்கியவர்
3. இக்கலைப்படைப்பின் சிறப்பியல்பு யாது?
4. இக்கலைப்படைப்பு காணப்படும் நகரம் எது?

(04 புள்ளிகள்)

(iii) 


1. இந்தக் கலைப்படைப்பு யாது?
2. இந்தக் கலைப்படைப்பு எக் காலத்துக்குரியது?
3. இக்கலைப்படைப்பின் மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்ச்சி நிலை என்ன?
4. இக்கலைப்படைப்பு காணப்படும் நகரம் எது?

(04 புள்ளிகள்)

02) (i) இலங்கையிலே வரலாற்றுக்கு முந்திய கால மனிதனுடைய எலும்புத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்ட மூன்று குகைகளை பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் உணவுக்காக பயன்படுத்திய நான்கு விலங்கினங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையில் குடியேறிய ஆரியர்களின் அரசியலில் காணப்பட்ட இரு பண்புகளை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) நீர்வள நாகரிக காலத்தில் மேம்பட்ட நீர்பாசனத் தொழில்நுட்பம் இருந்தமையை மூன்று உதாரணங்கள் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

03) (i) பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய அரசர்களை ஒழுங்குமுறையாகக் குறிப்பிடுக.

A - ஜேத்தவனராம விகாரையை சாகலிக பிரிவினருக்கு கையளித்தல்
B - மிகார என்ற சேனாதிபதியின் ஆலோசனைப்படி செயற்படுதல்
C - திரிபிடகம் மாத்தளை அலுவிகாரையில் நூல் வடிவம் பெறுதல் (03 புள்ளிகள்)

(ii) A - அனுராதபுரத்தை ஆட்சி செய்த இரு மன்னர்களையும்
B - பொலனறுவையை ஆட்சி செய்த இரு மன்னர்களையும்
கீழே தரப்பட்ட பட்டியலிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

(2ம் கஜபாகு, 1ம் விஜயபாகு, 3ம் விஜயபாகு, 1ம் புவனேகபாகு, தாதுசேனன், 2ம் பராக்கிரமபாகு, 1ம் அக்போ) (04 புள்ளிகள்)

(iii) மகாசேன மன்னனின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற சமய நிகழ்வுகளை இரு விடயங்கள் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையில் நீர்வள நாகரிக காலத்தில் மேம்பட்ட நீர்ப்பாசன தொழில்நுட்பம் இருந்துள்ளது என்பதை மூன்று உதாரணங்கள் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

04) (i) இந்த இலங்கைப் படத்தில் பொலன்னறுவைக் காலத்தில் இலங்கையின் நிர்வாக அலகுகள் A, B, C என குறித்துக் காட்டப்பட்டுள்ளது. நிர்வாக அலகுகளின் பெயர்களை அதே ஒழுங்கில் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

A -

B -

C -



(ii) A - கிராமத்தில் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டல்

B - அரசனின் சத்திரத்திற்கு பொறுப்பான அதிகாரி

C - தக்கணதேச ஆட்சியாளன்

D - அரசனின் அரச ஆவணங்களுக்கு பொறுப்பானவன்

மேலே A, B, C, D ஆகியவற்றினால் காட்டப்பட்ட பணிகளுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை அதே ஒழுங்கில் தருக. (04 புள்ளிகள்)

(iii) நீர்வள நாகரிக காலத்தில் கலைகளின் நிர்மானத்தில் ஓவியக் கலைகள் பெறும் முக்கியத்தினை இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

(iv) நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்த மூன்று விடயங்களை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

05) (i) 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் காணப்பட்ட மூன்று ஆட்சிப் பிரிவுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) A - தந்துரேபோர்

B - கன்னொருவ போர்

மேலே தரப்பட்ட இரண்டு யுத்தங்களையும் வழிப்படுத்திய போர்த்துக்கேய தளபதிகளையும் வெற்றி கொண்ட மலையக மன்னர்களையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) முதலாம் விமலதர்மசூரிய மன்னன் தனது அரச மரபுரிமையை உறுதிப்படுத்துவதற்கும் கண்டி மக்கள் மத்தியில் பிரசித்தி பெறுவதற்கும் மேற்கொண்ட இரு நடைமுறைகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஒல்லாந்தர்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலிருந்து உச்ச பொருளாதார நன்மையைப் பெறுவதற்கு மேற்கொண்ட மூன்று நடைமுறைகளை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

06) (i) பின்வரும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய மூவர்களை A, B, C என்னும் ஒழுங்கு முறையில் காட்டுக.

A - 1915 சிங்கள - முஸ்லிம் கலவர காலத்தில் இலங்கையின் பிரித்தானிய ஆளுநர்.

B - ரொபேர்ட் பிறவுன்றிக் கரையோரப் பகுதிகளை ஆட்சி செய்த காலத்தில் கண்டியின் ஆட்சியாளன்

C - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்தில் சீயம் நாட்டிலிருந்து திருப்பட்டம் பெற்று வந்து சங்கராஜன் பதவி பெற்ற பிக்கு (03 புள்ளிகள்)

(ii) இலங்கையின் நீர்ப்பாசன விருத்திக்கு சேவையாற்றிய இரு பிரித்தானிய ஆளுநர்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட இரண்டு மாற்றங்களை உதாரணங்கள் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கி. பி. 1978 இன் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மூன்று விடயங்கள் கொண்டு விபரிக்குக.

(06 புள்ளிகள்)

07) (i) A - பிம்பிசாரன் காலத்தில் மகதத்தின் தலைநகரம்

B - நந்த பரம்பரையில் இறுதி ஆட்சியாளன்

C - மூன்றாவது பௌத்த மகாநாட்டைக் கூட்டுதல்

மேற்படி நிகழ்வுகளுடன் தொடர்புடைய சரியான விடையினை A, B, C என்ற ஒழுங்கில் தருக. (03 புள்ளிகள்)

(ii) A - அசோக தூண்களின் உச்சியில் காணப்படும் இரு விலங்குகளையும்,
B - அசோக தூண்கள் காணப்படும் இரு இடங்களையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) அசோகச் சக்கரவர்த்தியின் பின் மௌரியப் பேரரசு படிப்படியாக வீழ்ச்சியடைவதற்கு செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) குப்தப் பேரரசு காலத்தில் பொருளாதார நிலை, கல்வி நிலை என்பன உயர்வு பெற்றிருந்தது என்பதை ஒவ்வொன்றுக்கும் இரு உதாரணங்கள் கொண்டு விபரிக்குக. (06 புள்ளிகள்)

08) பிரான்சியப் புரட்சி மூலம் மானிட வாதம் முதலில் வெளிப்பட்டுக் கொண்டது.

(i) பிரான்சியப் புரட்சிக் காலத்தில் பிரான்ஸினை ஆட்சி செய்த மூன்று மன்னர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பிரான்சியப் புரட்சியினை முன்னெடுத்துச் சென்ற இருவரின் பெயரினை குறிப்பிடுக (04 புள்ளிகள்)

(iii) பிரான்சியப் புரட்சிக்கு வழிகோலிய அரசியல், பொருளாதார காரணங்கள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) பிரான்சியப் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றினை உதாரணங்கள் கொண்டு சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

09) (i) பின்வரும் நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்களை A, B, C என்ற ஒழுங்கில் தருக.
A - சீனப்புரட்சியின் தந்தை என வர்ணிக்கப்பட்டவர்
B - இந்தியாவின் தேசபிதா என அழைக்கப்பட்டவர்
C - மேஜ்ஜி சீர்திருத்தத்தை ஜப்பானில் ஏற்படுத்தியவர் (03 புள்ளிகள்)

(ii) 19ம் நூற்றாண்டின் இறுதியில் சுதந்திரம் பெறும் நோக்கில் இந்தியாவில் தோன்றிய இரு அமைப்புக்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கிழக்காசியாவில் தனது அதிகாரத்தை பரப்புவதற்கு ஜப்பான் மேற்கொண்ட இரண்டு நடவடிக்கைகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) சீனப் புரட்சிக்கு பின்னணியாக இருந்த சமூக, பொருளாதார காரணங்களை மூன்று உதாரணங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

10) (i) முதலாம், இரண்டாம் உலகப் போர்க் காலங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் A, B, C என காட்டப்பட்டுள்ளது.
A - லுசித்தானியா எனப்பட்ட அமெரிக்கப் பயணிகள் கப்பல் ஜேர்மனியினால் தாக்கப்படுதல்
B - இத்தாலி லண்டன் இரகசிய உடன்படிக்கை மூலம் நேச அணியில் இணைதல்
C - பேர்ள் துறைமுகம் ஜப்பானினால் தாக்கப்படுதல்
மேற்படி நிகழ்வுகள் நடைபெற்ற காலப்பகுதியினை அதே ஒழுங்கில் தருக. (03 புள்ளிகள்)

(ii) A - முதலாம் உலகப் போருக்கு வழிகோலிய இரு காரணங்களையும்
B - இரண்டாம் உலகப் போருக்கு வழிகோலிய இரு காரணங்களையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) A - ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தோற்றத்துக்கு காரணமான மூன்று தலைவர்களையும் குறிப்பிடுக.
B - ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iv) அண்மைக் காலங்களில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் செயற்படுதல் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)


N
யாழ். கல்வி வலயம்


யாழ். கல்வி வலயம்